# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM
# PRELIMINARY EXAMINATION - FEBRUARY - 2018

## SUBJECT - TAMIL
## CLASS – X

Time: 3 Hours — Maximum Marks: 80

நேரம்: 3 மணி — மொத்த மதிப்பெண்கள்: 80

**The question paper is divided into four sections:**
**இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

| | | | |
|---|---|---|---|
| SECTION: A | Reading comprehension | - | 15 Marks |
| பிரிவு: அ | படித்தல் (உரைநடைப்பகுதி) | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION: B | Writing | - | 20 Marks |
| பிரிவு: ஆ | எழுதுதல் | - | 20 மதிப்பெண்கள் |
| SECTION: C | Grammar | - | 15 Marks |
| பிரிவு: இ | இலக்கணம் | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION: D | Literature/Text Books | - | 40 Marks |
| பிரிவு: ஈ | இலக்கியம்/தமிழ்ப்பாடநூல் | - | 40 மதிப்பெண்கள் |

<u>குறிப்பு :</u>

- கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.
- விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.
- வினாக்களின் எண்களை உரிய இடத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

## <u>பிரிவு - அ</u>

**1. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கபட்ட பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடை தருக. (5 x 1 = 5)**

தெற்கு ஆசிய அளவில் மிக அதிக பல்லுயிர் பெருக்கமுள்ள பகுதியில் மேற்குத்தொடர்ச்சி மலையும் ஒன்றாகும். இம்மலைத்தொடர் இமயமலைத் தொடருக்கு அடுத்தபடியாக மிக அதிக அளவில் தனக்கே உரித்தான உயிரினங்களுக்குத் தாயகமாக விளங்குகிறது. கன்னியா குமரிக்குச் சற்று வடக்கே உள்ள மலைப்பகுதிதான் பல்லுயிர் பெருக்கைக் கொண்டுள்ளதாக விளங்குகிறது. பழனி மலைத்தொடரும் ஆனை மலைத்தொடரும் சந்திக்கும் பகுதியில் தான் 2695 மீட்டர் உயரமுள்ள ஆனைமுடி என்னும் மலை உள்ளது. தென்னிந்தியாவில் உள்ள உயரமானதும், இமயமலைக்குத் தெற்கே மிக அதிக உயரமுள்ள மலையும் இதுவேயாகும்.

அச்சுறுத்தப்பட்ட உயிரினங்கள் பட்டியலில் இருப்பதுதான் இங்குள்ள வரையாடு. இதுதவிர பல்வேறு வகை ஆடுகள், காட்டெருமை போன்றவை இப்பகுதிக்குச் சொந்தமானவை. ஆசிய யானைகளை மிக அதிக எண்ணிக்கையில் இப்பகுதியில் தான் காணமுடியும். இக்காரணங்களினால் மட்டுமே இந்த மலைத்தொடரை உலகப்பாரம்பரியச் சின்னமாக யுனஸ்கோ அறிவித்துள்ளது.

1. மேற்குத் தொடர்ச்சி மலையின் மிக உயரமான மலையின் உயரம் யாது?

அ) 3465 மீட்டர்
ஆ) 2635 மீட்டர்
இ) 2165 மீட்டர்
ஈ) 2695 மீட்டர்

2. ஆனைமுடி மலை எங்குள்ளது?

அ) குற்றாலமலைக்குத் தெற்கே உள்ளது
ஆ) கன்னியாகுமரிக்கு வடக்கே உள்ளது
இ) பழனிமலைத் தொடரும், ஆனைமலைத்தொடரும் சந்திக்கும் இடத்தில் உள்ளது
ஈ) கன்னியாகுமரிக்குத் தெற்கே உள்ளது.

3. அச்சுறுத்தப்பட்ட உயிரினங்கள் பட்டியலில் இருப்பது எது?

அ) புள்ளிமான்
ஆ) ஆசிய யானை
இ) வரையாடு
ஈ) காட்டெருமைகள்

4. மேற்குத் தொடர்ச்சிமலை உலகின் எப்பகுதியில் உள்ளது?

அ) அமெரிக்க நாட்டுப்பகுதியில்
ஆ) ஐரோப்பா பகுதியில்
இ) தெற்கு ஆசியப்பகுதியில்
ஈ) ஆப்பிரிக்க நாட்டில்

5. உலகப் பாரம்பரியச் சின்னமாக எதனை யுனெஸ்கோ அறிவித்துள்ளது?

அ) இமய மலையத்தொடரை
ஆ) விந்திய மலைத்தொடரை
இ) மேற்குத் தொடர்ச்சி மலையை
ஈ) பழனி மலைத்தொடரும் ஆனைமலைத் தொடரும் இணைந்திடும் பகுதியை

**2. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கபட்ட பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடை தருக. (5 x 1 = 5)**

இந்தியன் இரயில்வே, உலகின் நான்காவது மிகப்பெரிய நிர்வாக அமைப்பாகும். ஆண்டுதோறும் சுமார் 7 பில்லியன் மக்கள் பயணம் மேற்கொள்கின்றனர். 350 மில்லியன் டன் சரக்குகள் கையாளப்படுகின்றன. இந்தியாவில் 1853 ஆம் ஆண்டு இரயில் சேவை தொடங்கப்பட்டாலும் 1951 ஆம் ஆண்டு "இந்தியன் ரயில்வே" என்ற அமைப்பாகி நாட்டுடைமை ஆக்கப்பட்டன. ஏறத்தாழ பத்து லட்சம் நேரடிப் பணியாளர்களையும் ஆறுலட்சம் மறைமுகப் பணியாளர்களுக்கும் வேலை வாய்ப்பளிப்பது

நிலையம். வடகோடியில் உள்ளது பாராமுல்லா இரயில் நிலையம் ஆகும். கிழக்கு கோடியில் உள்ளது அஸ்ஸாமில் உள்ள லேகாபானி நிலையம். மேற்குக் கோடியில் உள்ளது குஜராத் கட்சில் உள்ள நாலியா இரயில் நிலையம் ஆகும்.

1. இந்தியன் இரயில்வே நாட்டுடைமை ஆக்கப்பட்டது எப்போது?

அ) 1947 ஆம் ஆண்டு
ஆ) 1853 ஆம் ஆண்டு
இ) 1951 ஆம் ஆண்டு
ஈ) 1877 ஆம் ஆண்டு

2. இந்தியாவின் வட கோடியில் உள்ள இரயில் நிலையம் எது?

அ) லேகாபனி இரயில் நிலையம்
ஆ) கன்னியாகுமரி இரயில் நிலையம்
இ) பாராமுல்லா இரயில் நிலையம்
ஈ) மும்பை இரயில் நிலையம்

3. இந்தியன் இரயில்வேத்துறையில் பணியாற்றும் நேர் முகப்பணியாளர்கள் எத்தனை பேர்?

அ) ஆறு லட்சம்
ஆ) பத்து லட்சம்
இ) நான்கு லட்சம்
ஈ) ஒன்பது லட்சம்

4. குஜராத் கட்சில் உள்ள இரயில் நிலையத்தின் பெயர் யாது?

அ) நாலியா
ஆ) லேகாபானி
இ) கன்னியாகுமரி
ஈ) சென்னை எழும்பூர்

5. உலகில் இந்தியன் இரயில்வேத் துறை வகிக்கும் இடம் எது?

அ) முதலாவது
ஆ) இரண்டாவது
இ) மூன்றாவது
ஈ) நான்காவது

**3. பின்வரும் பத்தியைப் படித்து மூன்றில் ஒரு பங்காக ச் சுருக்கி வரைக. (1 x 5 = 5)**

நாட்டில் பெருகிவிட்ட தொழிற்சாலைகளால் நச்சுக்காற்று பரவி வருகிறது. முக்கியமாக சாயத்தொழிற்சாலை, தோல் பதனிடும் தொழிற்சாலை முதலிய இடங்களிலிருந்து கழிவு நீர் வெளியேறி நிலத்தடி நீரோடு கலந்து வருகிறது. இதனால் கால்நடைகள், மக்கள், தாவரங்கள் என அனைத்து உயிரினங்களுமே பாதிக்கப்படுகின்றன. போக்குவரத்து சாதனங்களாலும், சாலைகளிலிருந்து வெளிவரும்

புகைகளாலும் காற்று மாசுபடுகிறது. மக்கள் உபயோகிக்கும் பிளாஸ்டிக் பொருட்கள், பாலிதீன் பைகள் போன்றவை மண்ணிடையே மக்கிப் போகாமல் தேக்கமாகி உள்ளதால், நிலம் மாசுபட்டுவிடுகிறது. அறிவியல் ஆய்வினால் ஏற்பட்ட தீமைகளில் ஒன்று போபாலில் ஏற்பட்ட நச்சுவாயுக் கசிவாகும். இதனால் பல்லாயிரக் கணக்கான மக்கள் இறந்ததுடன் உயிர்பிழைத்த மக்களும் பலவிதமான உடல் பாதிப்புகளுடன் வாழ்கின்றனர். உடல்தூய்மையும் உள்ளத்தூய்மையும், தனிமனித வாழ்விற்குச் சிறந்தது. ஆனால் சுற்றுப்புறத்தூய்மை இந்த சமூக வாழ்விற்குச் சிறந்தது. சுற்றுப்புறத்தூய்மை பற்றிய விழிப்புணர்வை மாணவர்கள் மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும்.

## பகுதி - ஆ

4. உமக்குத் தேவையான சில புத்தகங்களை அனுப்பித்தருமாறு புத்தகப் பதிப்பாளருக்கு ஒரு கடிதம் எழுதுக.

**அல்லது**

பேருந்து வசதி வேண்டிப் போக்குவரத்துக் கழக மேலாளருக்குக் கூட்டு விண்ணப்பம் ஒன்று வரைக.. **(6)**

**(உமது முகவரி: ரதி / ரவி, கதவு எண் - 45, சேக்கிழார் வீதி, சிதம்பரம் - 626 157 எனக்கொள்க)**

5. **ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று வரைக.** **(8)**

அ) முன்னுரை - பெண்கள் - முக்கியத்துவம் - பெண்கள் நாட்டின் கண்கள் - சமுதாய முன்னேற்றம் - முடிவுரை.

**அல்லது**

ஆ) முன்னுரை - சேமிப்பு - சிறுதுளி பெருவெள்ளம் - அவசர அவசிய செலவுகள் - முடிவுரை.

**அல்லது**

இ) முன்னுரை - ஆழிப்பேரலை - முதலுதவி - முற்காப்பின் அவசியம் - முதலுதவிப்பொருள்கள் - முடிவுரை

## பகுதி - இ

**6) சான்று தருக (மூன்றனுக்கு மட்டும்)** **(3 x 1 = 3)**

1. **மகரக்குறுக்கம்**

அ) கடலை
ஆ) வெளவால்
இ) போல்ம்
ஈ) [illegible]

**2. பாடாண் திணை**

அ) ஆநிரை கவர்தல்
ஆ) வெற்றி பெறுதல்
இ) பொருந்தாக் காமம்
ஈ) ஆண்மகனின் ஒழுக்கம்

**3. திரிதல் புணர்ச்சி**

அ) மரவேர்
ஆ) பொற்கொடி
இ) வாழைமரம்
ஈ) வாழைப்பழம்

**4. முல்லை நிலப்பறவை**

அ) மயில்
ஆ) நாரை
இ) புறா
ஈ) கிளி

**5. ஐகாரக் குறுக்கம்**

அ) மருளும்
ஆ) பஃறீது
இ) வளையல்
ஈ) வௌவால்

**7) நிரப்புக (மூன்றனுக்கு மட்டும்)** **(3 x 1 = 3)**

**1. பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை ________________**

அ) நண்பகல்
ஆ) எற்பாடு
இ) மாலை
ஈ) யாமம்

**2. இரட்டுற மொழிதல் அணி ______________ எனவும் வழங்கப்பெறும்.**

அ) சொற்பொருள்
ஆ) பொருள் பின்வரு
இ) சிலேடை
ஈ) மொழி

3. காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல்லைக்கொண்டு முடியும் எச்சம் ---------------------------- எனப்படும்.

அ) குறிப்புப் பெயரெச்சம்
ஆ) தெரிநிலைப் பெயரெச்சம்
இ) குறிப்பு வினையெச்சம்
ஈ) தெரிநிலை வினையெச்சம்

4. ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது _______________ ஆகும்.

அ) உறுவது கூறல் விடை
ஆ) உற்றது உரைத்தல் விடை
இ) இனமொழி விடை
ஈ) ஒருபொருட்பன்மொழி

5. உவர்க்கழி என்பது __________________ நிலத்திற்குரிய நீர்.

அ) முல்லை
ஆ) நெய்தல்
இ) பாலை
ஈ) மருதம்

8) கூறியவாறு செய்க (மூன்றனுக்கு மட்டும்) (3 x 1 = 3)

1. வௌவால் (ஔகாரத்தின் மாத்திரை அளவு கூறுக)

அ) அரை
ஆ) ஒன்று
இ) ஒன்றரை
ஈ) இரண்டு

2. மாடு (திணை கூறுக)

அ) உயர்திணைப்பொதுப்பெயர்
ஆ) அஃறிணைப்பொதுப்பெயர்
இ) விரவுப் பெயர்
ஈ) பொதுத்திணைப்பெயர்

3. மான் __________ மருளும் பார்வை (உரிய உவம உருபை இணைத்து எழுதுக.

அ) அன்ன
ஆ) உறழ
இ) புரைய
ஈ) போல

4. ஐப்பசி, கார்த்திகை (பெரும்பொழுது கூறுக)

அ) குளிர் காலம்
ஆ) கார் காலம்
இ) முன்பனிக் காலம்
ஈ) பின்பனிக் காலம்

5. ஈற்றடியின் ஈற்றுச்சீர் 'ஏ'காரத்தில் முடியும் (பா வகை கூறுக)

அ) வெண்பா
ஆ) ஆசிரியப்பா
இ) கலிப்பா
ஈ) வஞ்சிப்பா

9. இலக்கணக்குறிப்பு தருக (மூன்றனுக்கு மட்டும்) (3 x 1 = 3)

1. அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ?

அ) அறிவினா
ஆ) அறியா வினா
இ) ஐய வினா
ஈ) கொளல் வினா

2. கனிவாய்

அ) உவமை
ஆ) உருவகம்
இ) விரியுவமை
ஈ) தொகையுவமை

3. எள்ளுவர்

அ) தேமாங்காய்
ஆ) கூவிளம்
இ) கருவிளம்
ஈ) புளிமாங்காய்

4. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்

அ) சொற்பொருள் பின்வரு நிலையணி
ஆ) பொருள் பின்வரு நிலையணி
இ) சொல்பின்வரு நிலையணி
ஈ) பிறிது மொழிதல் அணி

5. ஓடிச்சென்றான்

அ) எச்சம்
ஆ) முற்றெச்சம்
இ) பெயரெச்சம்
ஈ) வினையெச்சம்

**10. சரியான தொடரைத் தேர்வு செய்க (மூன்றனுக்கு மட்டும்) (3 x 1 = 3)**

1. அ) உவமையைக் கூறி பொருளைப் பெற வைப்பது வஞ்சப்புகழ்ச்சி அணி.
ஆ)உவமையைக் கூறி பொருளைப் பெற வைப்பது பின்வரு நிலை அணி.
இ) உவமையைக் கூறி பொருளைப் பெற வைப்பது பிறிது மொழிதல் அணி.
ஈ) உவமையைக் கூறி பொருளைப் பெற வைப்பது தற்குறிப்பேற்ற அணி.

2. அ) அகம், புறம் ஆகிய இரண்டும் அக இலக்கணம் ஆகும்.
ஆ)அகம், புறம் ஆகிய இரண்டும் பொருள் இலக்கணம் ஆகும்.
இ)அகம், புறம் ஆகிய இரண்டும் அகத்திணை ஆகும்.
ஈ)அகம், புறம் ஆகிய இரண்டும் புறத்திணை ஆகும்.

3. அ)முற்றுப்பெறாத வினைச்சொற்கள் வினைமுற்று எனப்படும்.
ஆ)முற்றுப்பெறாத வினைச்சொற்கள் வினைச்சொல் எனப்படும்.
இ)முற்றுப்பெறாத வினைச்சொற்கள் பெயர்ச்சொல் எனப்படும்.
ஈ)முற்றுப்பெறாத வினைச்சொற்கள் எச்சம் எனப்படும்.

4. அ) இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது அடுக்குத்தொடர்.
ஆ) இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது இரட்டைக்கிளவி.
இ) இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது இனங்குறித்தல்.
ஈ) இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது குறிப்புச்சொற்கள்.

5. அ) வெண்பாவின் ஓசை தூங்கலோசை ஆகும்.
ஆ) வெண்பாவின் ஓசை துள்ளலோசை ஆகும்.
இ) வெண்பாவின் ஓசை அகவலோசை ஆகும்.
ஈ) வெண்பாவின் ஓசை செப்பலோசை ஆகும்.

## <u>பகுதி - ஈ</u>

**11. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கேற்ற விடையை எழுதுக. (5 x 1 = 5)**

அரசியல் சாசனத்தின் 19 (1) ஆவது பிரிவின்படி குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் முழுமையான பேச்சுரிமை, எழுத்துரிமை உண்டு; மேலும், அதற்குரிய தகவல்களைப் பெறவும் முழு உரிமை உண்டு.

செலுத்திய வரிப்பணம் எந்த வகையில் பயன்படுத்தப்படுகிறது என்பதனைத் தெரிந்து கொள்ளவும் முழு உரிமை உள்ளது. இதனைத்தான் அரசியல் சாசனம் வலியுறுத்துகிறது. இதை முன்னிறுத்தித்தான் தகவல் உரிமைச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியக் குடிமக்கள் தனியாகவோ ஓர் அமைப்பின் மூலமாகவோ தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 6 இன் படி தகவல் பெறலாம். தகவல் பெறுவதற்கெனத் தனி விண்ணப்பம் இல்லை. உரிய அலுவலகத்திலுள்ள பொதுத்தகவல் அலுவலரிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

1. இந்தியக்குடிமக்களின் பேச்சுரிமைச் சட்டம் எந்தப் பிரிவில் உள்ளது?

2. நமது நாட்டின் இயக்கம் எவ்வகையில் இயங்கும் அமைப்பாகும்?

3. இந்தியக் குடிமக்கள் தகவல்களை எவ்வாறு பெறலாம்?

4. சனநாயகத்தில் மக்கள் எவ்வாறாகக் கருதப்படுகிறார்கள்?

5. தகவல் அறியும் உரிமைச்சட்டம் உருவாக்கப்பட்ட நோக்கம் யாது?

**12. பின்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (4 x 1 = 4)**

**'எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்**
**புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்**
**வாயிற் கடைமணி நடுநா நடுங்க**
**ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்**
**அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன் '**

1. 'எள்ளறு' என்பதன் பொருள் யாது?

அ) எள்ளு
ஆ) அற்று
இ) தவறு
ஈ) இகழ்ச்சி அற்று

2. அரும்பெறல் புதல்வனை ஆழியில் மடித்த அரசர் யார்?

அ) மாசாத்துவான்
ஆ) கோவலன்
இ) மனுநீதிச்சோழன்
ஈ) சிபிச்சக்ரவர்த்தி

3. இப்பாடல் இடம்பெற்ற நூல் ________

அ) சிலப்பதிகாரம்
ஆ) சீவக சிந்தாமணி
இ) மணிமேகலை
ஈ) பாஞ்சாலி சபதம்

4. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) பாரதியார்
ஆ) இளங்கோவடிகள்
இ) சீத்தலைச்சாத்தனார்
ஈ) உமறுப்புலவர்

**13. பின்வரும் குறட்பாக்களில் உள்ள கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக.**

**(4 x 1/2 = 2)**

1. ______________ காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டும் ______________.

2. ஒழுக்கத்தின் ______________ உரவோர் இழுக்கத்தின்
______________ படுபாக் கறிந்து.

**14. எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடை தருக. (2 x 4 = 8)**

1. காலமறிதலை வள்ளுவர் வழிநின்று நிறுவுக.

2. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை, நற்றிணைப் பாடல் வழித் தொகுத்து எழுதுக.

3. வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றிக் கலித்தொகைப் பாடல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

4. நிற்க நேரமில்லை - பாடல் மூலம் இளந்திரையன் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**15. எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடை தருக. (2 x 5 =10)**

1. குழந்தைத் திருமண எதிர்ப்பு குறித்து ஈ.வே.ரா. கூறியனவற்றைத் தொகுத்து எழுதுக.

2. அம்பேத்கார் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்?

3. தமிழரின் இசைக்கலை குறித்து எழுதுக.

4. அணுபற்றிய கம்பரின் கருத்து யாது?

5. காந்தியடிகள் பின்பற்றிய கொள்கைகளைத் தொகுத்து எழுதுக.

**16. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. (1 x 7 = 7)**

1. அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துக்களைச் சுருக்கி எழுதுக.

2. எம்.ஜி.இராமச்சந்திரன் பற்றிக் கட்டுரை எழுதுக.

3. இலிண்ட்கிரெனின் பண்பு நலன்கள் யாவை?